




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








திங்கள் ❖ ஏப்ரல். 24, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 199 ❖ ரூ.10


### திருச்சியில் ஓ.பி.எஸ். நடத்தும் முப்பெரும் விழா மாநாடு

# ஆயத்தம்

## மாலை 5 மணிக்கு லட்சுமன் ஸ்ருதி ஆர்கெஸ்ட்ராவுடன் மாநாடு தொடங்குகிறது.

## தொண்டர்களுக்காக சப்பாத்தி ரோல், 3 லட்சம் தண்ணீர் பாட்டில்கள், 2 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் தயார்



திருச்சி, ஏப். 24-

தேர்தல் ஆணையமும் நீதிமன்ற தீர்ப்புகளும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சாதகமாக வந்த நிலையில் அரசியல் களத்தில் தனது பலத்தைநிரூபிக்கதிருச்சியில் ஒரு மாநாட்டை நடத்த முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் முடிவு செய்தார்.

இந்த மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்கள் வருவார்கள். இது பன்னீர்செல்வத்துக்கு திருப்புமுனை மாநாடாக அமையும் என அவரது ஆதரவாளர்கள் அழுத்தம், திருத்தமாக கூறி வந்தனர். இதற்கிடையே தேர்தல் ஆணையம் எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க. பொதுச் செயலாளராக அங்கீகரித்து, இரட்டை இலை சின்னத்தையும் கொடுத்து விட்டது.

இதுஓ.பி.எஸ்.தரப்புக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும் திட்டமிட்டபடி திருச்சி பொன்மலை ஜி. கார்னர் மைதானத்தில் இன்று எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, பிறந்த தின விழா, கட்சியின் 51-வது ஆண்டு விழா ஆகிய முப்பெரும் விழா மாநாட்டினை பிரம்மாண்டமாக நடத்த ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

மாநாட்டு பந்தல் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. அ.தி.மு.க. கொடி, சின்னம் போன்றவற்றையும் பயன்படுத்தி வருகின்றனர். கொடியில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளனர். வழக்கமாக அ.தி.மு.க. கொடியில் அண்ணா உருவப்படம் மட்டுமே இடம்பெற்றிருக்கும். தற்போது ஓ.பி.எஸ். அணியினர் உருவாக்கி உள்ள புதிய கொடியில் அண்ணா கை நீட்டும் இடத்தில் அவரது விரல்களில் இரட்டை இலை சின்னம் வட்டமிடப்பட்டு உள்ளது. சட்ட சிக்கலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகஇவ்வாறு பயன்படுத்துவதாக கூறப்படுகிறது. மேலும் மாநாட்டு பிளக்ஸ் பேனர்களில் அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக்கழக முப்பெரும் விழா என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அறிந்த அ.தி.மு.க.வினர், பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமியை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளதால் ஓ.பி.எஸ். தரப்பினர் அ.தி.மு.க. பெயர், கொடி சின்னம் ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது. மீறினால் சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும் என கூறியுள்ளனர். அது மட்டும் அல்லாமல் மாநகரபோலீஸ்கமிஷனர் அலுவலகத்திலும் சனிக்கிழமை எழுத்து பூர்வமாக புகார் அளித்தனர். ஒருபுறம் சட்ட சிக்கல்கள் மறுபுறம் மாநாட்டு ஆயத்தப் பணிகள் மேற்கொள்வதில் குறைந்த நாட்கள் என ஓ.பி.எஸ். அணி நெருக்கடியை சந்தித்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் இதனை ஓ.பி.எஸ். அணியை சேர்ந்த ஆர்.வைத்திலிங்கம் திட்டவட்டமாக மறுத்தார். ரெயில்வே நிர்வாக தரப்பு மைதானத்தைஎங்களுக்கு 5 நாட்களுக்குத்தான் அனுமதி வழங்கியுள்ளனர். ஏப்ரல் 20-ந்தேதி முதல் 25-ந்தேதிக்குள் முடித்துக் கொள்ள வேண்டும் என கூறியுள்ளனர். குறுகிய நாட்களாக இருந்தாலும் திட்டமிட்டபடி மாநாடு பிரம்மாண்டமாக நடைபெறும். நீதிமன்றத்தில் இன்னமும் வழக்குகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. எடப்பாடி பழனிசாமிக்கு எதுவும் சொந்தமாக வில்லை. நாங்கள் தான் உண்மையான அ.தி.மு.க., ஆகவே மாநாட்டு மேடையில் அ.தி.மு.க.வின் பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்துவோம் என திட்டவட்டமாக தெரிவித்தார்.

இதற்கிடையே நேற்று காலை 80 சதவீத மாநாட்டு முன்னேற்பாட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளதாக ஓ.பி.எஸ். அணியினர் தெரிவித்தனர். மேலும் அவர்கள் கூறும்போது, இன்று மாலை 5 மணிக்கு லட்சுமன் ஸ்ருதி ஆர்கெஸ்ட்ராவுடன் மாநாடு தொடங்குகிறது. சரியாக மாலை 6 மணிக்கு ஓ.பன்னீர்செல்வம் மாநாட்டு பந்தலுக்கு வருகை தருகிறார். தொண்டர்கள் அமர்ந்திருக்கும் பகுதியில் இருந்து தொண்டர்களின் கரகோஷத்துடன் நடந்து சென்று மேடை ஏறுகிறார். இதில் ஓ.பி.எஸ். அணியின் அரசியல் ஆலோசகர் பண்ருட்டியார், வைத்திலிங்கம் எம்.எல்.ஏ., கு.ப.கிருஷ்ணன், ஜே.சி.டி.பிரபாகர், பி.எச். மனோஜ் பாண்டியன் எம்.எல்.ஏ. மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர், மாநில அணி நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

இதில் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அமர்வதற்கு வசதியாக 50,000 இருக்கைகள் போடப்பட உள்ளன. மேலும் தேவைக்கு ஏற்ப பயன்படுத்த வசதியாக கூடுதல் நாற்காலிகள் வரவழைக்கப்பட்டுள்ளது. தொண்டர்களுக்கு சப்பாத்தி ரோல், குடிநீர் பாட்டில்கள் அந்தந்த இருக்கை வரிசையில் கடைசியில் பாக்சுகளில் பொருத்தி அதில் வைக்கப்படும். 3 லட்சம் தண்ணீர் பாட்டில்கள், 2 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் ஆர்டர் செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாடு ஓ.பி.எஸ்.க்கு கண்டிப்பாக திருப்புமுனையை ஏற்படுத்தும். கட்சியை தொண்டர்கள் வசம் ஆக்குவோம் என்றனர்.

இதற்கிடையே கொடி, சின்னம் பயன்படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளகாரணத்தால் மாநாட்டு பகுதியில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். சுப்பிரமணியபுரம் புதுக்கோட்டை சாலையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்திலும் பலத்தபோலீஸ்பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



▸ கல்சன் குழுமம் ஏற்பாட்டில் மே மாதம் 1ம் தேதி உழைப்பாளர் தினத்தன்று கேப்டன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக இருக்கின்ற பேராசிரியர் ஆலங்குடி வெள்ளைச்சாமி நடுவராக பங்கேற்கும் சிறப்பு பட்டிமன்றம் சகோதர சகோதரிகள் ஒற்றுமையாக இருப்பது அக்காலமா? இக்காலமா? படப்பிடிப்பு புதுக்கோட்டை இலா ரிஷார்ட்டில் நேற்று நடைபெற்றது. அக்குழுவினரை புதுகை வரலாறு நிறுவனர் சு.சிவசக்திவேல் சந்தித்து வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம்.

## நாட்டின் அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர் யாராக இருந்தாலும் நடவடிக்கை உறுதி பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான்

அமிர்தசரஸ், ஏப். 24-

காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் அம்ரித்பால் சிங் கைது செய்யப்பட்ட நிலையில் நாட்டின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் யாராக இருந்தாலும் நடவடிக்கை உறுதி என்று பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான் தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் அம்ரித்பால் சிங் பஞ்சாபின் மோகா பகுதியில் நேற்று காலை கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக பஞ்சாப் மாநில முதல்வர் தனது ட்விட்டர் பக்கத்தில் ஒரு வீடியோவைப் பகிர்ந்துள்ளார். அதில், "35 நாட்களுக்குப் பின்னர் நேற்று அம்ரித்பால் சிங் கைது செய்யப்பட்டுள்ளார்.



நாட்டின் அமைதிக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள், சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். அப்பாவிகளைத் தொந்தரவு செய்யமாட்டோம். ஏனெனில் நாங்கள் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதில்லை. அம்ரித்பால் கைது செய்யப்படுவதை வரை அமைதி காத்த மூன்றரை கோடி பஞ்சாப் மக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

சீக்கியர்களுக்கு என தனி நாடு தேவை என்பது காலிஸ்தான் அமைப்பின் பிரதான கோரிக்கையாக உள்ளது. பஞ்சாபைச் சேர்ந்த காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் அம்ரித் பால் சிங் 'அனந்த்பூர் கல்சா ஃபவுஜ்'என்ற பெயரில் தீவிரவாத குழுவை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவந்தார். அவரை கைது செய்ய போலீஸார் முடிவு செய்தனர். இதையடுத்து அவர் தலைமறைவானார். அவர் நேபாளத்துக்கு தப்பிவிட்டதாகத் தகவல்கள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து அவர் ஆடியோ, வீடியோ என்று வெளியிட்டு போலீஸுக்கு சவால்விடுத்து வந்தார்.

இந்நிலையில்நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார். 1984ம் ஆண்டு இந்திரா காந்திக்கு நேர்ந்தது போல, மத்திய அமைச்சர் அமித்ஷாவுக்கும் நிகழும் என மிரட்டல் விடுத்ததால் அவர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்துள்ளது.

அம்ரித்பால் சிங்குக்கு பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாகவும் அவர்கள் மூலம் ஆயுதங்களைப் பெற்று பஞ்சாபில் இளைஞர்களை துப்பாக்கிக் கலாச்சாரத்திற்கு தூண்டுவதாகவும் மத்திய புலனாய்வு அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. அம்ரித்பால் சிங் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள என்பது குறிப்பிடத்தக்கது.






▸ புதுக்கோட்டை பெரியார் நகரில் இயங்கி வரும் ரமேஷ் ஸ்கேன் சென்டர் புதிய கட்டிடத்தில் (இடமாற்றம்) திறப்பு விழா நேற்று நடைபெற்றது. ரமேஷ் ஸ்கேன் சென்டர் நிர்வாக இயக்குனர் ரமேஷ்-ன் தந்தையார் பெரியவர் முத்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் புதுக்கோட்டை எம்எல்ஏ டாக்டர் முத்துராஜா, மற்றும் மருத்துவர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ரமேஷ் ஸ்கேன் சென்டரில் நவீன காலத்திற்கு ஏற்ப சிடி, அல்ட்ரா சவுண்ட், மற்றும் லேப் வசதியுடன் கூடிய சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

“உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்.”

புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,605 | Rs. 6,059 |


# ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வணிகரீதியாக இஸ்ரோ செலுத்திய பிஎஸ்எல்வி சி55 ராக்கெட் பயணம் வெற்றி



சென்னை , ஏப்.24-

பிஎஸ்எல்வி-சி55 ராக்கெட் மூலம் சிங்கப்பூரின் ‘டெலியோஸ்-2’ உள்ளிட்ட 2 செயற்கைக் கோள்களும் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.

நம் நாட்டுக்கு தேவையான தகவல் தொடர்பு, தொலை உணர்வு மற்றும் வழிகாட்டு செயற்கைக் கோள்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), விண்ணில் செலுத்திவருகிறது. இதுதவிர, வணிகரீதியாகவும் வெளிநாட்டு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துகிறது.

அந்த வகையில், சிங்கப்பூருக்கு சொந்தமான டெலியோஸ்-2 உள்ளிட்ட 2 செயற்கைக் கோள்களை வணிகரீதியாக விண்ணில் ஏவுவதற்கு இஸ்ரோவின் என்எஸ்ஐஎல் (Newspace India Limited) அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த செயற்கைக் கோள்களை பிஎஸ்எல்வி-சி55 ராக்கெட் மூலம் செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தில் அனைத்து ஏற்பாடுகளும் முடிந்த நிலையில், ராக்கெட் பயணத்துக்கான 25.30 மணி நேர கவுன்ட்-டவுன் கடந்த 21-ம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இந்நிலையில், மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து 2 செயற்கைக் கோள்களுடன் பிஎஸ்எல்வி-சி55 ராக்கெட் சனிக்கிழமை மதியம் 2.19 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. புறப்பட்ட 19 நிமிடத்தில் 2 செயற்கைக் கோள்களும் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டன.

இதில் முதன்மை செயற்கைக் கோளான டெலியோஸ்-2 மொத்தம் 741 கிலோ எடை கொண்டது. புவி கண்காணிப்பு செயற்கைக் கோளான இது, சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் தொழில்நுட்பத்தில் செயல்படக்கூடியது. இது அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை எடுத்து வழங்கும். இயற்கை பேரிடர் கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு இந்த செயற்கைக் கோள் பயன்படுத்தப்பட உள்ளது.

இதனுடன் ஏவப்பட்ட லூம்லைட்-4 (16 கிலோ) எனும் சிறிய செயற்கைக் கோள், சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்டது. இது தொழில்நுட்ப ஆய்வு மற்றும் கடல்வழி போக்குவரத்துக்கு உதவும்.

இதுதவிர, பிஎஸ்எல்வி ராக்கெட்டின் இறுதி பகுதியான பிஎஸ்-4 பகுதியில் ‘போயம்-2’ எனும் பெயரில் 3-வது முறையாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதன்படி, பிஎஸ்-4பகுதியில் இஸ்ரோ, இந்திய வான் இயற்பியல் நிறுவனம் உட்பட 4 ஆராய்ச்சி மையங்களுக்கு சொந்தமான 7 ஆய்வுக்கருவிகள் இணைத்து அனுப்பப்பட்டுள்ளன. செயற்கைக் கோள்கள் நிலைநிறுத்தப்பட்ட பிறகு, பிஎஸ்-4 பகுதியின் உதவியுடன் இந்த ஆய்வுக் கருவிகள், புவியை வலம் வந்து அடுத்த ஒரு மாதத்துக்கு ஆய்வு மேற்கொள்ளும்.

ஏற்கெனவே வணிகரீதியாக சிங்கப்பூரின் டெலியோஸ்-1 செயற்கைக் கோளை பிஎஸ்எல்வி-சி29 ராக்கெட் மூலம் இஸ்ரோ கடந்த 2015 டிச.16-ல் விண்ணில் செலுத்தியது. கடந்த 1993 முதல் இதுவரை 34 நாடுகளை சேர்ந்த 424 செயற்கைக் கோள்களை பிஎஸ்எல்வி மூலம் இஸ்ரோ விண்ணில் நிலைநிறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னிப்பு, நஷ்ட ஈடு என்ற பேச்சுக்கே இடமில்லை அமைச்சர் உதயநிதிக்கு பதில் நோட்டீஸ் அனுப்பினார் அண்ணாமலை



சென்னை , ஏப்.24-

திமுகவினரின் சொத்துப்பட்டியல் வெளியிட்ட விவகாரத்தில் மன்னிப்பு, நஷ்ட ஈடு என்ற பேச்சுக்கே இடமில்லை என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அனுப்பிய நோட்டீஸுக்கு, பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பதில் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, கடந்த ஏப்.14 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், கே.என். நேரு, பொன்முடி, எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி உட்பட திமுகவினர் பலரது சொத்துப் பட்டியல் தொடர்பாக ஆவணங்களை வெளியிட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக அமைப்பு செயலாளரான ஆர்.எஸ். பாரதி, அண்ணாமலை பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும், இல்லையென்றால் ரூ.500 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் நோட்டீஸ் அனுப்பினார். அதேபோல், உதயநிதி ஸ்டாலின் சார்பில், அண்ணாமலை 48 மணிநேரத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், இல்லையென்றால் இழப்பீடாக ரூ.50 கோடியை முதல்வரின் நிவாரண நிதிக்கு வழங்க வேண்டும் என்றும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. டி.ஆர்.பாலு தரப்பிலும் ரூ.100 கோடி இழப்பீடு கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் அண்ணாமலை தரப்பில் ஏற்கெனவே ஆர்.எஸ். பாரதிக்கு பதில் நோட்டீஸ் அனுப்பப்பட்ட நிலையில், அமைச்சர் உதயநிதி சார்பில் அனுப்பப்பட்ட நோட்டீஸுக்கு, அண்ணாமலை சார்பில் வழக்கறிஞர் ஆர்.சி. பால்கனகராஜ் அனுப்பியுள்ள பதில் நோட்டீஸில் கூறியிருப்பதாவது:

திமுகவினரின் ஊழலை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தவே இந்த சொத்துப்பட்டியலை வெளியிட்டுள்ளேன். உதயநிதி ஸ்டாலின் தனது குடும்ப, அரசியல் அதிகாரத்தை தனது திரைப்பட தயாரிப்பு நிறுவனத்துக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளார். தற்போது அந்தநிறுவனத்தில் இருந்து ராஜினாமா செய்து விட்டாலும் அந்த நிறுவனத்தின் சட்டவிரோத செயல்பாடுகளுக்கு பின்புலமாக இருப்பவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

ஊழலை பொதுவெளியில் பகிரங்கப்படுத்த எனக்கு முழு உரிமை உள்ளது. திமுகவினரின் மிரட்டலுக்கு நான் அடிபணிய மாட்டேன். நான் எந்த குற்றமும் செய்யவில்லை என்பதால் இந்த விஷயத்தில் மன்னிப்பும் கோர முடியாது. நஷ்ட ஈடும் வழங்க முடியாது. அந்தபேச்சுக்கே இடமில்லை. உதயநிதியும், அவரது குடும்பத்தினரும் சட்டவிரோதமாக சம்பாதித்துள்ள சொத்துகளை தமிழக மக்களுக்கு திருப்பி கொடுக்க வேண்டும் என அதில் தெரிவித்துள்ளார்.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தாருஸ்ஸலாம் பள்ளி முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பாக கடையநல்லூர் வரலாற்று சிறப்புமிக்க முதன் முறையாக 103 ஆண்டுகள் கடந்த தாருஸ்ஸலாம் நூற்றாண்டு மாணவர்கள் ஒரே நேரத்தில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 1921 ஆம் ஆண்டு தாருஸ்ஸலாம் பள்ளிக்கூடம் உருவாக்கப்பட்டது, அன்று முதல் இன்று வரை 100 ஆண்டுகள் இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் தங்கள் பழைய நண்பர்களை சந்தித்து நினைவுகளை பரிமாறிக் கொள்ள ரம்ஜான் ஈத் மிலன் 2023 ஆம் ஆண்டில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் மாணவர்களும் இந்நாள் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், இதர துறைகளை சேர்ந்தவர்கள் அது மட்டுமல்லாது இப்பள்ளியில் வேலை பார்த்த முன்னாள் இந்நாள் ஆசிரியர்கள் என சுமார்1000-த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியை தாருஸ்ஸலாம் பள்ளி நிர்வாகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# ஆடியோவில் இருப்பது நிதி அமைச்சரின் குரல்தான் மத்திய அரசு விசாரணைக்கு வலியுறுத்துவோம் இபிஎஸ் உறுதி



மதுரை , ஏப்.24-

"30,000 கோடி பணத்தை என்ன செய்வது, எங்கு வைப்பது என்று தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். எனவே இதையெல்லாம் வெட்ட வெளிச்சத்துக்கு கொண்டு வரவேண்டும். இதுதொடர்பாக மத்திய அரசு விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவோம். ஆளுநரிடம் இதை சமர்ப்பிப்போம்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆடியோ குறித்து கேட்கப்பட்டது. அப்போது நிதி அமைச்சர் பேசும் ஆடியோ பதிவை செய்தியாளர்களிடம் ஐபேட் வழியே போட்டுக்காட்டினார். அமைச்சரே பேசிவிட்டு, புனையப்பட்டது என்று அவரே எப்படிச் சொல்ல முடியும். எனவே இதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

ரூ.30,000 கோடி என்பது சாதாரண விஷயமல்ல. 30,000 கோடி ரூபாய் ஊழல் செய்யப்பட்டது என்று நிதி அமைச்சரே வாக்குமூலம் கொடுத்துள்ளதாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். எல்லா வலைதளங்களிலுமே இது காட்டுத்தீப்போல பரவி வருகிறது. ஊடகங்கள்தான் வெளியிடவில்லை. எங்களுக்கு பெரிய சந்தேகமே தற்போது அவர் பேசியதுதான். சமூகவலைதளங்களில் இதுபோல நிறைய வருகிறது. அப்போதெல்லாம் அவற்றை நாங்கள் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், நிதி அமைச்சர் மறுப்பு அறிக்கைவிட்ட பிறகுதான், இதில் ஏதோ இருக்கிறது என்று தோன்றுகிறது. இது அவருடைய குரல்தான்.

ரூ.30,000 கோடி பணத்தை என்ன செய்வது, எங்கு வைப்பது என்று தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். எனவே இதையெல்லாம் வெட்ட வெளிச்சத்துக்கு கொண்டு வரவேண்டும். இதுதொடர்பாக மத்திய அரசு விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவோம். ஆளுநரிடம் இதை சமர்ப்பிப்போம். நிதி அமைச்சர் பேசியிருக்கிறார். அது போலியானதா, சரியானதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். உண்மையென்றால், நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏதேதோ விசயங்களுக்காக அறிக்கை வெளியிடும் முதல்வர், இதுதொடர்பாக அறிக்கை வெளியிடவேண்டியதுதானே. இது போலி என்று அறிக்கை வெளியிடவேண்டியதுதானே.

அதிமுக மீது எந்த குற்றச்சாட்டுகளும் இல்லாதபோது, எத்தனை குற்றச்சாட்டுகளை எங்கள் மீது கூறி வருகிறார். ஆதாரபூர்வமாக எதுவுமே கிடையாது. இருந்தாலும், எங்கள் முன்னாள் அமைச்சர்கள் மீது எப்படியெல்லாம் வழக்குகள் புனையப்படுகிறது. திட்டமிட்டு திமுக அரசு அதிமுகவை பழிவாங்கிக் கொண்டிருக்கிறது. அதேநேரம் 2 ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்களுக்கு நன்மை செய்யவில்லை. கொள்ளையடிப்பதைத்தான் குறிக்கோளாக கொண்டிருக்கிறது. 30 ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளையடித்துள்ளனர் என்றால், அதை நினைத்துப் பார்க்கவே அதிர்ச்சியளிக்கிறது" என்று அவர் கூறினார்.

## ஆவுடையார்கோவில் அருகே அமரடக்கியில்

# விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய மாநாடு ஏராளமானோர் பங்கேற்பு



ஆவுடையார்கோவில் ,ஏப்.24-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா அமரடக்கியில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் எட்டாவது ஒன்றிய மாநாடு நேற்று நடைபெற்றது, மாநாட்டிற்கு ஜெபமாலை பிச்சை தலைமை தாங்கினார், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளரும், திருத்துறைப்பூண்டி ஒன்றிய பெருந்தலைவருமான அ. பாஸ்கர் கலந்துகொண்டுசிறப்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஏ. எல். இராசு, மாநிலக் குழு உறுப்பினர் கா. சுந்தரராஜன், மாவட்டத் துணைச் செயலாளர் மா.மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் தா. செங்கோடன், ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளர் வி. கே .காமாட்சி உட்பட 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், மாநாட்டில் பத்திற்கு மேற்பட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது, புதிய பொறுப்பாளர்கள் தமிழ் மாநில விவசாய தொழில் சங்கத்தின் ஆவுடையார்கோவில் ஒன்றிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர், இறுதியில் முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஜான் நன்றி கூறினார், நிகழ்ச்சிக்கு வந்திருந்த வி.தோ.ச மாநில செயலாளர் ஆ.பாஸ்கர் ,இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழரும் தியாகியுமான தோழர் அப்புகுட்டி நினைவிடத்திலும், துப்பாக்கி சூட்டினால் உயிர் நித்த தியாகி சிலுவை முத்து நினைவிடத்திலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# 12 மணி நேரம் வேலைக்கான சட்டத்திருத்தத்தைக் கண்டித்து புதுக்கோட்டையில் வாலிபர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, ஏப்.24-

8 மணிக்குப் பதிலாக 12 மணி என வேலை நேரத்தை மாற்றி தமிழ்நாடு அரசு கொண்டுவந்த தொழிற்சாலைகள் சட்ட திருத்தத்தைக் கண்டித்தும், உடனடியாக திரும்பப்பெற வலியுறுத்தியும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் சார்பில் புதுக்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வாலிபர் சங்க மாவட்டக்குழு உறுப்பினர் பி.அருண் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டத் தலைவர் எம். மகாதீர், துணைச் செயலாளர் கோபாலகிருஷ்ணன், , மாவட்ட குழு உறுப்பினர்கள் பாண்டி, கௌதம், தினேஷ், தமிழ்செல்வன் உள்ளிட்டோர் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான வாலிபர்கள் பங்கேற்றனர்.

# கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் உலக புத்தக தினம் தமிழ்நாடு அறிவியல் இயக்க துளிர் இல்லங்கள் சார்பில் கொண்டாடப்பட்டது



கந்தர்வகோட்டை, ஏப்.24-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் வீரடிப்பட்டி நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அறிவியல் இயக்க துளிர் இல்லங்கள் சார்பில் உலக புத்தக தினம் கொண்டாடப்பட்டது.

அனைவரையும் துளிர் இல்ல ஆசிரியர் மகேஸ்வரி வரவேற்றார், தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை வட்டாரத் தலைவர் ரகமதுல்லா தலைமை வகித்து, புத்தக தினம் குறித்து பேசினார் அப்போது, பொதுமக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக யுனெஸ்கோ சார்பில் உலக புத்தகதினம் 1995 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் 23 ஆம்தேதி கொண்டாடப்படுகிறது. இதன் மூலம் வாசிப்பு, எழுத்து மீதான ஆர்வம், மொழிபெயர்ப்பு, காப்புரிமை போன்றவற்றை ஊக்கப்படுத்துவதற்கான முயற்சியாக பார்க்கப்படுகிறது. இந்நிலையில் 2023 உலக புத்தக தினம் "சுதேசிமொழிகள்" என்ற கருப்பொருளில் உருவாக்கப்பட்டுள்ளது, இந்த தீம் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தையும் இலக்கியம் மற்றும் கதைசொல்லலில் உள்நாட்டு மொழிகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது என்று பேசினார்.

உலக புத்தக தினம் குறித்து துளிர் இல்ல மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிச்சைமுத்து நோக்கவுரை ஆற்றினார், சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அறிவியல் இயக்க புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் முத்துக்குமார் கலந்துகொண்டு மாணவர்கள் வாசிக்க வேண்டிய புத்தகங்கள் எனும் தலைப்பில் அறிவியல் இயக்கம் வெளியிட்டுள்ள நூல்கள் குறித்து மாணவர்களுக்கு அறிமுகம் செய்து பேசினார், பின்னர் ஊராட்சி ஒன்றிய கணக்கர் குமார் இல்லம் தேடி தன்னார்வலர்கள் கீதா, விஜி,பரமலேஸ்வரி, ரமிலா ஆகியோர் தன்னைக் கவர்ந்த நூல்கள் குறித்தும், எட்டாம் வகுப்பு மாணவி அன்பரசி நம் வாழ்கையை உயர்த்தும் புத்தகங்கள் என்ற தலைப்பில் பேசினார். இதில் குறும்படம் போட்டியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது, நிறைவாக தன்னார்வலர் பிரதீபா நன்றி கூறினார்.



தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூர் திமுக செயலாளர் மருத்துவர் எஸ்.எஸ். செண்பக விநாயகம் சென்னை திமுக தலைமை கழக மாநில மருத்துவ அணி துணைச் செயலாளராக நியமனம் செய்ததையொட்டி திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவிக்கும் விதமாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வரை சந்தித்து ஆசி பெற்றார். இந்நிகழ்ச்சியில் திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், துணை அமைப்பு செயலாளர்கள் ஆர். எஸ்.பாரதி, அன்பகம் கலை, செய்தித்துறை அமைச்சர் வெள்ளகோவில் சாமிநாதன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழில் நாகநாதன், திமுக மருத்துவ அணி செயலாளர் பத்மநாபன், இ.கே.இளங்கோவன், சிறுபான்மை அணி மாநிலத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தென்காசி மாவட்ட வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் நல்ல சேதுபதி ஆகியோரை சந்தித்து ஆசி பெற்றார்.



புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு ஒவ்வொரு மாதமும் இரண்டு சனிக்கிழமைகளில் காரைக்கால் வருகை புரிந்து காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கி வருகிறது. நேற்று சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நரம்பியல் மற்றும் மூளை தண்டுவட அறுவை சிகிச்சை சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வருகை புரிந்து சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

# இந்தியாவை காப்பாற்ற தி.மு.க.வினர் தயாராக வேண்டும்– முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை , ஏப். 24 –

தி.மு.க. மாநில விவசாய அணி துணை செயலாளர் நல்லசேதுபதி இல்லத் திருமண விழா சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா வருகிற ஜூன் 3-ந் தேதி தொடங்குகிறது. நூற்றாண்டு விழாவையொட்டி கழகத்தின் சார்பில் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை கூட்டி ஒரு இலக்கு வைத்துள்ளோம். என்னவென்றால் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்ப்பது, அதையும் தாண்டி 2024-ல் வர இருக்கிற பாராளுமன்ற தேர்தலையொட்டி ஆங்காங்கே 'பூத்' கமிட்டியை அமைப்பது என்ற இலக்கு வைத்துள்ளோம். இந்த பணியை தீவிரப்படுத்த வேண்டும். இந்த இலக்கை நாம் நிறைவேற்றினால்தான் இந்த நாட்டை நாம் காப்பாற்ற முடியும். அதை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். தமிழ் நாட்டை பொறுத்த வரை 2 ஆண்டு காலமாக நடை பெற்றுக்கொண்டிருக்கிற ஆட்சி தி.மு.க. ஆட்சி என்று நான் சொல்வதில்லை. நம்முடைய ஆட்சி என்று தான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

சட்டமன்றத்தில் கூட பட்ஜெட் விளக்க கூட்டத் தொடரின் நிறைவுநாளில் நான் பேசுகிறபோது குறிப்பிட்டு சொன்னேன். ஆட்சிக்கு வந்த 2 ஆண்டு காலத்தில் என்னென்ன பணிகளை நிறைவேற்றி இருக்கிறோம். மூன்றாம் ஆண்டை தொடங்க இருக்கிறோம். ஆகவே தேர்தல் நேரத்தில் அளித்த அத்தனை உறுதிமொழியையும் எந்த அளவுக்கு தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். நிதிநிலை பற்றாக்குறையாக இருந்தாலும், ஒன்றிய அரசு நமக்கு தேவையான அளவுக்கு துணை நிற்காவிட்டாலும் அதை எல்லாம் தாண்டி இந்தியாவிலேயே ஒரு சிறந்த மாநிலமாக நம்பர்-1 முதலமைச்சர் என்ற பெயரை பெற்றிருக்க கூடிய ஒரு மாநிலமாக இன்று வளர்ந்து கொண்டிருக்கிறோம். ஆட்சிக்கு வந்ததும் முதல் கையெழுத்தே பேருந்தில் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யலாம் என்பதுதான். அதே போல பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்கு செல்லக்கூடிய மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.1000 மாதம் வழங்கப்படும். அது இன்றைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. குடும்பத் தலைவி உரிமைத்தொகையாக 1000 ரூபாய் மாதம் வழங்கப்படும் என்று அறிவித்தோம். அதையும் ஆட்சிக்கு வந்த உடனே நிறைவேற்ற வேண்டும் என்றுதான் முடிவு செய்தோம். ஆனால் இருந்த நிதிநிலை சூழ்நிலை, அதையெல்லாம் இன்றைக்கு ஓரளவுக்கு சரி செய்து அதற்கு பிறகு இந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவித்து உள்ளோம். அதன்படி அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ந்தேதியன்று அந்த உரிமைத்தொகை மாதம் ரூ.1000 வழங்கப்பட உள்ளது. இப்படி பெண்களின் முன்னேற்றத்துக்கு பல திட்டங்களை தீட்டினாலும், அதேநேரத்தில் மாநில உரிமைகளை நாம் விட்டுக்கொடுக்க கூடாது. மாநில உரிமைக்கு போராட வேண்டும் என்ற நிலையில் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

2024 பாராளுமன்ற தேர்தலை எதிர்நோக்கி காத்திருக்கிறோம். அந்த தேர்தலில் நாம் முழுமையாக அகில இந்திய அளவில் நாம் வெற்றி பெற்றால் தான் இந்த நாட்டை காப்பாற்ற முடியும் என்ற சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். இதற்கு நீங்கள் என்றைக்கும் துணை நிற்க வேண்டும். இந்தியாவை காப்பாற்றுவதற்கு நீங்கள் இப்போதே தயாராக இருக்க வேண்டும். உங்களை ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். 2024-ல் வர இருக்கிற பாராளு மன்ற தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை நம் அணிக்கு ஏற்படுத்தி தருவதற்கு நீங்கள் துணை நிற்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா நெம்மக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வைரத்தேர் வெள்ளோட்ட விழா நேற்று நடைபெற்றது, இதில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவர் வள்ளியம்மை தங்கமணி, திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் தங்கமணி மற்றும் தொழிலதிபர்கள்,விழா குழுவினர் ஊர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொரோனா பரவலை தடுப்பதற்கு அனைத்து அரசாங்க மருத்துவமனைகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

## புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் பேட்டி



சென்னை, ஏப். 24 –

குரு பெயர்ச்சியை முன்னிட்டு சென்னை திருவொற்றியூரில் தட்சணாமூர்த்தியை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் சாமி தரிசனம் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழிசை, மக்களுக்கு ஆன்மீக நம்பிக்கை பக்க பலமாக இருக்கிறது. அவர்கள் மனரீதியாக எல்லா கஷ்டத்தையும் கடவுளிடம் விட்டுவிட்டு மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதற்காக கோவிலுக்கு வருகிறார்கள். காலையிலே கடுமையான வெயில் வெப்பம் வாட்டுகிறது. கோவில் அருகாமையில் அதிகமான தண்ணீர் வசதி, ஓய்வு எடுக்க வசதி, பந்தல் இவற்றையெல்லாம் அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

பொதுமக்களும் அதிகமாக நீர் அருந்த வேண்டும். அதிக நீராகாரம், நீர் மோர் அருந்தலாம். பழைய கஞ்சி தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார். உடலில் நீர் சத்து குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெளியில் போனால் தலையில் தொப்பி அல்லது துணி அணிந்து செல்ல வேண்டும். பொதுமக்கள் கடுமையான வெயிலில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். வெளியிடங்களுக்கு குழந்தைகளை அழைத்து செல்வதை தவிர்க்க வேண்டும். அதனால் தான் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

கொரோனா திரும்ப வருவதற்கு வாய்ப்புள்ளது. இந்திய அளவில் பாதிப்பு ஏற்படுத்தி வருகின்றது. இப்பொழுது வரும் கொரோனா வீரியம் குறைவாக உள்ளது. ஆனால் அதிலேயும் தொற்று உள்ளது. ஆகையால் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொது இடங்களில் நெருக்கமான இடங்களில் இருப்பதை தவிர்க்க வேண்டும். அதிக நெருக்கமான இடங்களில் முக கவசத்தை அணிய வேண்டும். கைகள் மூலம் நோய்த்தொற்று பரவுவதால் சானிடைசர் உபயோகப்படுத்த வேண்டும்.

புதுச்சேரியில் கொரோனா பரவலை தடுப்பதற்கு அரசாங்க மருத்துவமனையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், கொரோனா பரிசோதனை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# ஓ.பி.எஸ். நடத்தும் மாநாடு வரலாறு படைக்கும் பண்ருட்டி ராமச்சந்திரன் பேட்டி



திருச்சி , ஏப். 24 –

ஓ.பி.எஸ். அணி சார்பில் திருச்சி பொன்மலை ஜி. கார்னர் மைதானத்தில் இன்று முப்பெரும் விழா மாநாடு நடைபெறுகிறது. இதனைப் பார்வையிட்ட அரசியல் ஆலோசகர் பண்ருட்டி ராமச்சந்திரன் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது:- 1956-ல் அண்ணா திருச்சியில் மாநாடு நடத்தினார். அந்த ஆண்டு தான் நான் தி.மு.க.வில் இணைந்தேன். அந்த மாநாட்டில் தான் தி.மு.க. தேர்தலில் போட்டியிடலாமா, வேண்டாமா என்கிற வாக்கெடுப்பு நடந்து தி.மு.க. தேர்தல் நடந்தது. 67 ஆண்டுகளுக்கு பிறகு அறிஞர் அண்ணா வழியில் இந்த மாநாடு நடக்க உள்ளது. இது வரலாற்றை படைக்கும் மாநாடாக இருக்கும். அ.தி.மு.க.வில் ஒருங்கிணைந்த என்கிற பேச்சுக்கே இடமில்லை.

எம்.ஜி.ஆரிடம் உங்கள் அரசியல் வாரிசு யார் என கேட்ட போது அ.தி.மு.க.வின் தொண்டர்கள் தான் என் அரசியல் வாரிசு என்றார். அந்த வழியில் தொண்டர்களை அழைத்து உங்கள் இயக்கத்தை நீங்களே நடத்துங்கள் என கூறுவதற்கு தான் இந்த மாநாடு. ஒரு சிலர் பொதுக்குழுவை அவர்களே நியமித்து தலைமை கழக நிர்வாகிகளை நியமித்தார்கள். அது இட்டுக்கட்டிய சிறு கும்பல். அவர்களுக்கும் இந்த இயக்கத்துக்கும், தொண்டர்களுக்கும் சம்மதமில்லை. அ.தி.மு.க. தனி தன்மை வாய்ந்தது. தொண்டர்கள் தான் பொதுச்செயலாளரை தேர்ந்தெடுக்க முடியும். தேர்தல் கமிஷன் சின்னம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லை ஏனென்றால் இங்கு நிர்வாகம் முடங்கவே இல்லை. ஒருங்கிணைப்பாளருக்கு முரணாக செயல்பட்டால் அந்த பொதுக்குழுவை கலைக்க ஒருங்கிணைப்பாளருக்கு அதிகாரம் உள்ளது. அ.தி.மு.க.வின் சட்ட விதிகளை புரிந்து கொள்ளாமல் நீதிபதிகள் தீர்ப்பு வழங்குகிறார்கள்.

அவர்களுக்கு புரிய வைக்கும் அளவுக்கு எங்களுக்கு சக்தி இல்லையோ என தோன்றுகிறது. அ.தி.மு.க.வின் தலைமை அலுவலகம் ஜானகி அம்மையார் எம்.ஜி.ஆருக்கு கொடுத்தது. அது எடப்பாடி பழனிச்சாமிக்கு சொந்தமானது அல்ல, அந்த கட்டிடத்தில் உள்ள ஒவ்வொரு செங்கல்லும் அ.தி.மு.க.வின் ஒவ்வொரு தொண்டர்களுக்கும் உரியது. எங்கள் தலைவரும், அண்ணியாரும் எங்களுக்கு கொடுத்த சீதனம் இது. திருச்சியில் நாளை நடைபெறும் மாநாட்டிற்கு சசிகலா மற்றும் டி.டி.வி.தினகரன் பங்கேற்பு குறித்து தற்பொழுது உறுதியாக எதுவும் கூற முடியாது. ஒரு கட்சியிலிருந்து மற்றொருவர் வேறொரு கட்சிக்கு சென்றால் அது யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது. கட்சி இயங்குவதற்கு தொண்டர்கள் முக்கியம், அதை வெற்றி பெற செய்ய மக்கள் ஆதரவு முக்கியம். அ.தி.மு.க.வில் தொண்டர்களின் ஆதரவு எடப்பாடி பழனிச்சாமிக்கு இருக்கிறதா, ஓ.பி.எஸ்.க்கு இருக்கிறதா என்பதை நாளை மாநாட்டின் மூலம் தெரிந்து கொள்வீர்கள். எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் எங்கள் மாநாட்டிற்கு மட்டுமல்ல அ.தி.மு.க.விற்கே முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.



உலகப் புகழ் பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா தங்க கொடி மரத்தில் கொடியேற்றம் நடந்தது. கொடியேற்றத்தை யொட்டி மீனாட்சி அம்மன் பிரியாவிடையுடன் சுந்தரேஸ்வரர் ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி தருதல், இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

# தண்ணீர் தொட்டியில் விளையாடிய குழந்தை தவறி விழுந்து பலி

*திருவள்ளூர், ஏப். 24 –*

*திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், திருக்கண்டலம் ஊராட்சியில் ரூபி பிரிக்ஸ் சேம்பர் என்ற தனியார் செங்கல் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது. இதில், ஒடிசா மாநிலம், பலாங்கீர் மாவட்டம், மால்பார கிராமத்தைச் சேர்ந்த தாராசந்த் பாண்டே என்பவர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் கடந்த இரண்டு மாதங்களாக இங்கே வந்து தங்கி இருந்து பணியாற்றி வந்தார்.*

*நேற்று முன்தினம் மாலை இங்குள்ள தண்ணீர் தொட்டியில் தாராசந்த் பாண்டேவின் மகள் பத்மினி பெஹாரா (வயது 4.6) விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது எதிர்பாராத விதமாக தண்ணீர் தொட்டியில் மூழ்கி மயங்கினார். உடனடியாக அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே குழந்தை இறந்து விட்டதாக கூறினர்.*

*இந்த சம்பவம் குறித்து குழந்தையின் தாய் சோபாகினி பெஹாரா பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். எனவே போலீசார் வழக்கு பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.*

# காபிரியேல் தேவாலயத்தில் இலவச மருத்துவ முகாம் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்



ஊத்துக்கோட்டை, ஏப். 24 –

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சி, பெரிய காலணியில் காபிரியேல் ஆலயம் எனப்படும் சர்ச் உள்ளது.

இங்கு தென்னிந்திய திருச்சபை சென்னை பேராயத்துக்குட்பட்ட மூவரசம்பட்டு குருசேகரம் மற்றும் வடமதுரை குருசேகரம் இணைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாம் நேற்று நடத்தினர். இதில் டாக்டர்கள் சோபன் அரசுகுமார், யூஜின்வில்சன், விஜி ஈஸ்வரதாஸ், ஏஞ்சலின் கிரேஸ், எபுரோன் கிறிஸ்டோபர் ஆகியோர் தலைமையில் வந்திருந்த மருத்துவ குழுவினர் நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு பொது மருத்துவம், பல் மருத்துவம், சித்தா உள்ளிட்ட மருத்துவ சேவைகளை வழங்கி இலவசமாக மருந்து, மாத்திரைகளை வழங்கினர்.

நடைபெற்ற இந்த மருத்துவ முகாமுக்கு இரண்டு குருசேகரங்களின் தலைவர் பி.தேவபிரசாத் தலைமை தாங்கினார். மூவரசம்பட்டு குருசேகர ஆயர் ஜான் செல்வயாபேஸ் முன்னிலை வகித்தார். இதில், சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு மருத்துவ முகாமை துவக்கி வைத்து பேசினார்.


இந்நிகழ்ச்சியில் எல்லாபுரம் ஒன்றிய திமுக செயலாளர்கள் பி.ஜே. மூர்த்தி, ஆ.சத்தியவேலு, எல்லாபுரம் ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கே.ரமேஷ், வடமதுரை ஊராட்சி மன்ற தலைவர் இ.கே.காயத்ரி கோதண்டன், வடமதுரை ஒன்றிய குழு உறுப்பினர் ஏ.ஜமுனா அப்புன், வடமதுரை ஊராட்சிமன்ற துணைத்தலைவர் பாக்கியலட்சுமி ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தி பேசினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மூவரசம்பட்டு குருசேகர செயலாளர் எஸ். சாலமோன் பாபு, பொருளாளர் மேபல் ஜெபசிங், வடமதுரை குலசேகர செயலாளர் டாக்டர் டி.சார்லஸ், பொருளாளர் எஸ்.தமிழ்மன்னன் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து வழங்கினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மூவரசம்பட்டு குருசேகரம் மற்றும் வடமதுரை குருசேகரம் இறைமக்கள் செய்திருந்தனர்.



கொருக்குப்பேட்டை பாரதி நகர் அருள்மிகு திருமால் முருகன் திருக்கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு ஜீவாநகர் குறிஞ்சி மலர் நண்பர்கள் மற்றும் புதிதாக தொடங்க இருக்கும் அமைப்பின் சார்பாக பிரம்மாண்ட பந்தல் அமைக்கும் நிகழ்வின் தொடக்கமாக நேற்று பந்தல் கால் நடும் விழா நடைப்பெற்றது. இந்த விழாவில் ப.மணிவண்ணன், லயன் சந்திர மோகன் ,பெ.ராம்குமார், ச.இக்பால் ஆர். எம்.டி.தனசேகர்,அருள்,தாமு. ரமேஷ்பாபு,ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரண்டு நாட்களில் மூன்று கொலைகள் அரங்கேறிய வடசென்னை: பயத்தில் பொதுமக்கள்



சென்னை, ஏப். 24 –

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை ஆரணி ரங்கன் தெருவைச் சேர்ந்த முன்னாள் ரவுடியான கருப்பு குமார் தனது வீட்டின் அருகே நண்பர்களுடன் பேசி கொண்டு இருந்த போது முன்விரோதம் காரணமாக 6 பேர் கொண்ட கும்பல் கருப்பு குமாரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பி ஓடி விட்டனர். இதில் கருப்பு குமார் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கருப்பு குமார் உயிரிழந்த செய்தி கேட்டு அவரது நண்பரான திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த ராஜசேகர் நேற்று இரவு குடிபோதையில் ஆரணி ரங்கன் தெருவில் வந்துள்ளார். கருப்பு குமாரின் உறவினரான கமலக்கண்ணன் இருவருக்கும் குடிபோதையில் ஏற்பட்ட தகராறில் கீழே இருந்த கல்லை எடுத்து ராஜசேகர் தலையில் அடித்து விட்டு கமலக்கண்ணன் வீட்டிற்கு சென்றுள்ளார்

காலையில் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டு இருந்த ராஜசேகரை பார்த்து பொதுமக்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்தனர்.

இச்சம்பவம் குறித்து கொருக்குப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து கமலக்கண்ணனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ராஜசேகரன் சிகிச்சை பலனின்றி அதிகாலையில் உயிரிழந்துள்ளார்.

வடசென்னை பகுதிகளில் இரண்டு நாட்களில் அடுத்தடுத்து மூன்று கொலை சம்பவங்கள் அரங்கேறி இருப்பது பரபரப்பையும், பொதுமக்களிடம் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# மதுபோதையில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் வெட்டிக் கொலை 6 பேர் கொண்ட கும்பலுக்கு போலீஸ் வலைவீச்சு



திருவொற்றியூர், ஏப். 24 –

சென்னை, திருவொற்றியூர் மணலி விரைவு சாலையில் உள்ள கண்டெய்னர் யார்டு அருகே நண்பர்கள் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு மது குடித்துள்ளனர். அப்போது இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டனர்.

வியாசர்பாடியை சேர்ந்த 23 வயதுடைய சஞ்சய் என்ற இளைஞர் மது போதை அதிகமாக இருந்ததால் தனது நண்பர்களுடன் திருவொற்றியூர் திருச்சினான்குப்பம் பகுதியில் உள்ள கடற்கரையில் படகில் படுத்துக்கொண்டு இருந்துள்ளார். அப்போது 6 பேர் கொண்ட கும்பல் சஞ்சயை சுற்றி வளைத்து சரமாரியாக வெட்டியதாக கூறப்படுகிறது.

கடற்கரை ஒட்டி உள்ள தெருவில் சஞ்சய் தப்பிக்க முயன்று ஓடியபோது அந்த மர்ம கும்பல் சஞ்சயை ஓட ஓட வெட்டியுள்ளனர். பின்னர் சஞ்சய் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்த மருத்துவர்கள் பரிசோதனை செய்த போது மோசமான நிலை உள்ளதால் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறியுள்ளனர். ஆனால் சஞ்சய் போகும் வழியிலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் பவுன் குமார் ரெட்டி விசாரணை மேற்கொண்டார். இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார் வழக்கு பதிவு செய்து தப்பியோடிய குற்றவாளிகளை பிடிக்க மூன்று தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

# தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் மோடி அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி,ஏப்.24–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் எஸ்சி, எஸ்டி பிரிவு மாவட்டத் தலைவர் பி. ராமச்சந்திரன் தலைமையில் தேரடி திடலில் மோடி அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, பாஜக மோடி அரசால் தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கில் நீதிக்கு புறம்பான தண்டனையை விதைத்ததை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தலைமை பி. ராமச்சந்திரன், துணைத் தலைவர் சுப்புராஜ் திலகம், மகளிர் அணி மாவட்டத் தலைவி சேர்மக்கனி, மேலநீலிதநல்லூர் முருகையா, சுந்தர்ராஜன் மாநிலப் பேச்சாளர் மாவட்ட பிரதிநிதி ,ஆலங்குளம் தொகுதிஎஸ்சி,எஸ்டிதலைவர் கோடீஸ்வரன், கடையநல்லூர் தலைவர் பரமசிவன், மாவட்ட பொருளாளர் தாவீது, ஊடகத்துறை தலைவர் வெங்கடேசன், சங்கரன்கோவில் தொகுதி வேலுச்சாமி, வட்டாரத் தலைவர் முனியசாமி, கடையநல்லூர் வட்டாரத் தலைவர் அசோக்குமார், அய்யாதுரை, செந்தூர்பாண்டியன், மேலநீலிதநல்லூர் கிழக்கு பழனிச்சாமி, மாவட்ட பிரதிநிதி சங்கர பாண்டியன், சிதம்பரம், சங்கரன்கோவில் நகரத் தலைவி சக்தி முப்புடாதி, மாவட்ட செயலாளர் வேலம்மாள், மகளிர் அணி சங்கர் ரதி, சமுத்திரவள்ளி, பொன்னுத்தாய், செல்லம்மாள், செங்கோட்டை வட்டாரத் தலைவர் எஸ் சி ,எஸ் டி பிரிவு ஈஸ்வரன், முருகன், பிரபாகரன், அம்சத் அலி, அப்துல் கனி, சுடலை, ஆறுமுகசாமி, தேவ குச்சாராம் கிஷோர்,சமத்தன் ,அடிமன், சங்கரன்கோவில் வட்டாரத் தலைவர் எஸ்சி, எஸ் டி ஆகியோர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# விதைக்கலாமின் நானூறாவது வார மரக்கன்றுகள் நடும் நிகழ்வு



புதுக்கோட்டை , ஏப்.24-

இந்திய திருநாட்டின் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் இந்த உலகை விட்டு மறைந்த இரண்டு வாரங்களுக்கு பிறகு தொடங்கப்பட்ட அமைப்பு 400 வாரங்களை கடந்திருக்கிறது. வாரம் ஐந்து கன்றுகள் வீதம் கிட்டத்தட்ட 60 ஆயிரம் மரக்கன்றுகளை புதுக்கோட்டை பூமியில் விதைத்து அவற்றை பராமரித்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமையான நேற்று விதைக்கலாமின் நானூறாவது வார மரக்கன்றுகள் நடும் நிகழ்வு அரசுமேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி திருக்கோகர்ணத்தில் நடைபெற்றது. அப்போது 50 கன்றுகளை பள்ளி வளாகத்தில் நடவு செய்தனர். நிகழ்வின் முதல் கன்றினை கவிஞர் தங்கம் மூர்த்தி நடவு செய்தார்.

நிகழ்வில் இயற்கை விவசாயி தங்க கண்ணன், கட்டிடப் பொறியாளர் சங்கத்தினர், பள்ளியின் முன்னாள்மாணவர் சங்கத்தினர், பத்திரிகையாளர்கள், இரு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்,இருபால் ஆசிரியப் பெருமக்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் விதைக்கலாம் குடும்பத்தினர் கலந்து கொண்டு கன்றுகளை நடவு செய்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்காவது இலவசமாக இது போல் மரகன்றுகளை நடவுசெய்ய யாராவரு விரும்பினால் இந்த நம்பரில் அழைக்கவும் 7639972504, 8344550036

# தென்காசியில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




தென்காசி, ஏப்.24-

கேரளாவுக்கு அளவுக்கு அதிகமாக கொண்டு செல்லப்படும் கனிம வளத்தை அடியோடு தடுத்து நிறுத்த கோரி தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் தோழமை கட்சிகள், இயக்கங்கள் , சார்பில தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு முன்னாள் செங்கோட்டை யூனியன் சேர்மன் கருப்பசாமி தலைமை வகித்தார் மாவட்ட செயலாளர் சங்கிலி பாண்டியன், பொருளாளர் பிரம்மநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முகேஷ் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார், வைகை பாசன விவசாயிகள் சங்கம் ஒருங்கிணைப்பாளர் பாலசிங்கம் அறிமுக உரை ஆற்றினார்.

இதில் காங்கிரஸ் ராம் மோகன், ஐயம் பெருமாள், செல்லத்துரை, அப்துல் காதர், யாசர் கான், முகம்மது அலி, மூர்த்தி, முருகேசன், தியாகராஜன், சீத்தாராமன், அகமது சுல்தான், சேது ஹரிகரன், மற்றும் பலர் கண்டன உரை ஆற்றினர் சிறப்பு அழைப்பாளராக சூழலியல் ஆர்வலர் முகிலன், வழக்கறிஞர் ஈசன் முருகசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க ஒன்றியத் தலைவர் ராஜா, அந்தோணி, முத்து ஆகியோர் நன்றி உரை ஆற்றினர்.

# திருமயத்தில் வாசகர் வட்டம் நடத்தும் உலக புத்தக தின விழா



திருமயம்,ஏப்.24-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தீரர் சத்தியமூர்த்தி கிளை நூலகத்தில் திருமயம் வாசகர் வட்ட உலக புத்தக தின விழா வாசகர் வட்டத் தலைவர் கா.மீனாட்சி சுந்தரம் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நூலகர் ராதா லட்சுமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமசுப்புராம் புதுகை அரசு மகளிர் கலைக்கல்லூரி இணைப் பேராசிரியர் கோ.சங்கர் திருமயம் ஊராட்சி மன்ற தலைவர் மு.சிக்கந்தர் மற்றும் இதனை தொகுத்து வழங்கிய எய்ம்ஸ் அறக்கட்டளை தலைவர் மு.சைமன் மற்றும் ஆனந்தன் சோலை வாசகர்கள் புரவல நிதி கொடுத்த வாசகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் விழா முடிவில் நூலகர் மு.மாலதி நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மேற்கு மாவட்ட பாஜக சார்பில் நடைபெற்ற வர்த்தக பிரிவு நிர்வாகிகள் பயிற்சி முகாம் மற்றும் அறிமுக கூட்டத்தில் மாவட்ட நிர்வாகி பிரசாத் பேசுகிறார். வர்த்தக பிரிவு மாநிலத் தலைவர் ராஜாகண்ணன், மாவட்டத் தலைவர் விஜயகுமார், மாவட்டப் பார்வையாளர் பழ செல்வம், மாநில துணைத் தலைவர் வீரன் சுப்பையா, மாநிலச் செயலாளர்கள் தீபக், முரளிதரன், மாவட்டப் பொதுச் செயலாளர் குரு ஸ்ரீராம், மாவட்டச் செயலாளர் சுந்தரவேல் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திம்பம் மலைப்பாதையில் கரும்பு லாரி கவிழ்ந்து 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு



தாளவாடி , ஏப்.24-

தாளவாடி அடுத்த திம்பம் மலைப்பாதையில் 27 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளன. இந்த மலைப்பாதை வழியாக தினந்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன. தமிழகம்-கர்நாடக இடையே முக்கிய போக்குவரத்தாக உள்ள இந்த பாதையில் அதிக பாரம் ஏற்றிச்செல்லும் வாகனங்களால் அடிக்கடி போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது.

இந்நிலையில் கர்நாடகா மாநிலம், சாம்ராஜ் நகரில் இருந்து அத்தாணி தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்பு பாரம் ஏற்றி லாரி ஒன்று வந்து கொண்டிருந்தது. அப்போது மாலை 5 மணியளவில் திம்பம் மலைப்பாதை 10-வது வளைவு அருகே லாரி வந்து கொண்டிருந்தபோது லாரி பாறையில் மோதி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இதில் லாரியில் இருந்த கரும்புகள் அனைத்தும் சாலையில் சிதறியது. இதனால் வாகனங்கள் ஏதும் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வாகனங்கள் அனைத்தும் மலைப்பாதையில் அணி வகுத்து நின்றன. பின்னர் அவ்வழியாக சென்ற பொதுமக்கள் சாலையில் கிடந்த கரும்புகளை சாலை ஓரத்தில் அகற்றினர். பின்னர் இரவு 7 மணியளவில் கரும்புகள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு வாகனங்கள் செல்ல தொடங்கின. இருந்தபோதும் வாகனங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் சென்றதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் திம்பம் மலைப்பாதையில் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.


# திருமயத்தில் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் ஆய்வு கூட்டம் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் பா.சிதம்பரம் வருகை



திருமயம், ஏப்.24-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வே.மு திருமண மண்டபத்தில் திருமயம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கான காங்கிரஸ் ஆய்வு கூட்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவருமான ராமசுப்புரம் தலைமையில் நடைபெற்றது.

காங்கிரஸ் ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னாள் மத்திய நிதி அமைச்சர் பா.சிதம்பரம் வருகை தந்து திருமயம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி வட்டார நகர நிர்வாகிகளிடம் ஆய்வு செய்தார், மேலும் பூத் கமிட்டி அமைப்பது சம்பந்தமாகவும் நிர்வாகிகளிடம் கலந்து பேசினார் மற்றும் கூட்டத்தில் ஆலங்குடி திருமயம் சட்டமன்ற தொகுதி வட்டார நகர நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் கடந்த ஓராண்டுக்கும் முன்பாக பல கோடி ரூபாய் மதிப்பில் நபார்டு திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளி கட்டிடம் மேற்கூரை பெயர்ந்து காணப்படுகின்றது. மேலும் பள்ளி கட்டிடத்தில் வாசல் படி, கைபிடி சுவர் பெயர்ந்து விழுந்துள்ளது. நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் பயிலும் பள்ளி கட்டிடத்தை பல கோடி ரூபாய் செலவில் கட்டும் ஒப்பந்தக்காரர்கள் பள்ளியில் பயிலும் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளின் உயிரைப் பற்றி கவலைப்படாமல் கட்டிடங்கள் கட்டி வருவதால் பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றது. ஆகவே அரசு பள்ளி கட்டிடங்களை காட்டும் போது ஒப்பந்தகாரர்கள் தரமான முறையில் கட்டிடங்கள் கட்டும் வகையில் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க பெற்றோர்கள் ,பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கறம்பக்குடி அருகே அரசு பள்ளியில் ஐம்பெரும் விழா



கறம்பக்குடி, ஏப். 24-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் கெண்டையம்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா ,பணி நிறைவு பாராட்டு விழா, இலக்கிய மன்ற விழா, விளையாட்டு விழா, கல்வி சீர் வழங்கியவர்களுக்கு பாராட்டு விழா என ஐம்பெரும் விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு வட்டார கல்வி அலுவலர்கள் வெங்கடேஸ்வரி, நரசிம்மன் ஆகியோர் தலைமை வகித்து பேசியதாவது,

பள்ளிக்கல்வித்துறையில் தமிழக அரசால் சிறப்பாக செயல்படுத்தி வரும் எண்ணும் எழுத்தும் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம் ஆகியவற்றை இப்பள்ளியில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள் எனவும், அரசு பள்ளியில் பயிலக்கூடிய குழந்தைகளுக்கு உயர்கல்வியில் 7.5% இட ஒதுக்கீடும், அரசு வேலை வாய்ப்புகளில் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு 20% இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது, பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை அரசு பள்ளியில் சேருங்கள் என்றும், இவ்விழாக்களின் மூலம் மாணவர் சேர்க்கை அதிகரிக்குமாறு பேசினார்கள், தலைமை ஆசிரியர் செல்வராணி அனைவரையும் வரவேற்றார். வட்டார வளமைய மேற்பார்வையாளர் பிரகாஷ், முன்னாள் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் கமருதீன் சேட், பள்ளி மேலாண்மை குழுத் தலைவி ரெங்கநாயகி, கல்வியாளர் அன்பரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்றத் தலைவர் புஷ்பலதா செந்தில் ஒன்றிய குழு உறுப்பினர் திருப்பதி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் முருகேசன், ரேவதி ரெங்கராஜன், முன்னாள் தலைமை ஆசிரியர் குணசேகரன், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுக்குழு உறுப்பினர் தியாகராஜன், தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி கல்வி மாவட்டத் தலைவர் துரையரசன், அறிவியல் இயக்கம் மாவட்டச் செயலாளர் முத்துக்குமார், இல்லம் தேடிக் கல்வி ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா, துரை .திருப்பதி முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் வைரக்கண்ணு, சாந்தார், சுப்பிரமணியன், முன்னாள் சத்துணவு அமைப்பாளர் நாகலிங்கம், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு தொடக்க பள்ளி ஆசிரியர் கூட்டணி வட்டாரச் செயலாளர் வேலாயுதம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர், பள்ளி ஆண்டறிக்கையை பட்டதாரி ஆசிரியர் சுப்புலட்சுமி வாசித்தார்.

மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் ,வரவேற்பு பாடலுடன் ஆண்டு விழா தொடங்கியது, கலை நிகழ்ச்சிகளை ஆசிரியைகள் வயோலா, யசோதா இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

# புதுக்கோட்டை ஸ்ரீ குமரன் தங்க மாளிகையில் அட்சய திருதியை விழா



புதுக்கோட்டை,ஏப்.24-

புதுக்கோட்டைவடக்கு ராஜ வீதியில் உள்ள ஸ்ரீ குமரன் தங்க மாளிகையில் அட்சய திருதியையொட்டி தங்கம் ,வெள்ளி நகைகள் வாங்க வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் குடும்பத்துடன் வருகைதந்து தங்களுக்கு பிடித்த நகைகளை வாங்கிச்சென்றனர், முகப்பில் குபேரர் லெட்சுமி சுவாமி அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது

அட்சய திருதியை என்றாலே நம் அனைவரின் நினைவுக்கும் வருவது தங்கம்தான், அட்சய திருதியை என்பது மங்களகரமான தொடக்கத்திற்கு உகந்த நாள், ஆனால் அதையும் தாண்டி தங்கம் வாங்குவதற்கு உகந்த நாள் என்று சொல்லும் அளவிற்கு வந்து விட்டது, ஏனெனில் அட்சய திருதியை அன்று தங்கம் வாங்கினால் மேலும் மேலும் வீட்டில் தங்கம், செல்வம் பெருகும் என்று நம்பப்படுகிறது. அதனால் பெரும்பாலானோர் அட்சய திருதியை அன்று ஒரு கிராம் தங்கமாவது வாங்குவதை வழக்கமாக கொண்டுள்ளனர். அட்சயதிருதியை அன்றுதங்கம் வாங்க வேண்டும் என்பதற்காக சிலர் தங்க நாணயங்களை வாங்குகிறார்கள். நகை வாங்க வேண்டும் என்று நினைப்பவர்கள் தங்களுக்கு பிடித்த நகைகளை வாங்குகிறார்கள்.

இந்த ஆண்டு நேற்றும், இன்றும் ஆகிய 2 நாட்கள் காலையில் திருதியை நாளாக கணக்கிடப்படுகிறது மீன ராசியில் இருந்து மேஷ ராசிக்கு இடம் பெயர்ந்தார் குருபகவான் நேற்று காலை 7.49 மணி முதல் பகல் 12.20 மணி வரை தங்கம் வாங்குவதற்கு முகூர்த்த நேரம் என்பதால் இன்று காலையிலேயே ஏராளமானோர் நகைக் கடைகளில் தங்க நாணயங்கள் மற்றும் நகைகளை வாங்கினார்கள். ஆனால் அந்த நேரத்தில்தான் தங்கம் வாங்க வேண்டும் என்பதில்லை. நாள் முழுவதும் தங்கம் வாங்கலாம். தங்கம் வாங்க முடியாதவர்கள் உப்பு, மஞ்சள், மல்லிகைப்பூ மற்றும் மங்கள பொருட்களை வாங்கி வீட்டில் உள்ள சாமி படத்தின் முன்பு வைத்து பூஜை செய்து வழிபடலாம்.

தங்கமோ,மங்களபொருளோ எதுவானாலும் சாமி படத்துக்கு முன்பு வைத்து வழிபட்ட பிறகு அன்றைய நாள் முழுவதும் அந்த பொருளை அங்கேயே வைத்து விட வேண்டும் மறுநாள் அந்த பொருட்களை எடுத்து நாம் பயன்படுத்தலாம். நகைக்கடை உரிமையாளர் ஒருவர் கூறியதாவது ,இந்த ஆண்டு அட்சய திருதியை 2 நாட்கள் வருவதால் காலை 6 மணிக்கே கடைகள் திறக்கப்பட்டு நகை விற்பனை தொடங்கியது, காலை முதலே கூட்டம் அமோகமாக உள்ளது. வாடிக்கையாளர்களை கவருவதற்காக நகைக்கடைகள் போட்டி போட்டுக்கொண்டு சலுகைகளை அறிவித்துள்ளன.. பெரும்பாலான நகைக்கடைகள் ஒருமாதத்துக்கு முன்பே அட்சய திருதியை விற்பனைக்கான நகை முன்பதிவை தொடங்கின. அப்படி ஏற்கனவே முன்பதிவு செய்தவர்கள் நேற்று கடைகளுக்கு வந்து நகைகளை வாங்கிச் சென்றனர். மேலும் கடைசி நேர நெருக்கடியை தவிர்ப்பதற்காக பலர் ஏற்கனவே சென்று நகைகளை தேர்வு செய்து வைத்திருந்தனர். அவர்களும் நேற்ற் நகைக்கடைக்கு சென்று தாங்கள் தேர்வு செய்து வைத்திருந்த நகைகளை பணம் கொடுத்து வாங்கிச் சென்றனர்.

# வாட்சப்பில் வந்தவை சமூக ஊடகம்

12 மணிநேர வேலைன்னா 9.00 - 9.00 தானேன்னு ரொம்ப ஈசியா நெனச்சுக்கிறாங்க போல.

திருப்பூர் மாதிரி ஏரியாவுல ஃபாக்டரி வேலை எப்படி இருக்கும் தெரியுமா?

9 மணிக்கு ப்ரொடக்சன் ஆரம்பிக்கனும்னா அவன் 8.45 க்கு யூனிட்க்குள்ள இருக்கனும். அப்பதான் மெசின தொடச்சி கிடச்சு, பொருள் எல்லாம் எடுத்து அரேஞ்ச் பண்ண முடியும்.

8.45 க்கு யூனிட்க்குள்ள இருக்கனும்னா 8.30க்கு ஃபாக்டரிக்குள்ள வந்திருக்கனும் அப்பதான் அட்டனன்ஸ் எண்ட்ட்ரி போட்டு உள்ள போக சரியா இருக்கும்.

8.30க்கு ஃபாக்டரிக்குள்ள இருக்கனும்னா அவன் 8.20 க்கு பஸ்சிலிருந்து இறங்கியிருக்கனும். அதுக்கு அவன் 8.00 மணிக்கு பஸ் ஏறியிருக்கனும்.

8 மணி பஸ் ஏற அவன் 7.50 க்கு பஸ் ஸ்டாண்ட் வரனும். அதுக்கு அவன் 7.30 க்கு வீட்லிருந்து கிளம்பனும். 7.15 மணிக்கு சாப்பிட்டு முடிச்சிருக்கனும். 6.45 மணிக்கு குளிச்சிருக்கனும். 6.30 க்கு காலைக்கடன் முடிச்சிருக்கனும். 6 மணிக்கு எழுந்திருக்கனும்.

நைட் 9 மணிக்கு மெஷின் ஆஃப் பண்ண பிறகு எடுத்து வெச்சிட்டு 9.15க்கு யூனிட்லர்ந்து வெளியே வந்து, எக்சிட் ரெஜிஸ்டர் பண்ணி ஃபாக்டரிக்கு வெளியே வரும்போது 9.30 ஆகியிருக்கும்.

பஸ்ச பிடிச்சு பஸ் ஸ்டாண்ட்ல இறங்கி, அங்கிருந்து வீட்டுக்கு ஓடி அப்பாடான்னு உக்காரும்போது 10.30 ஆகியிருக்கும். சாப்பிட்டு முடிச்சு பெட்டுக்கு போறப்ப மணி 11 ஆகியிருக்கும். ஆகமொத்தம் தூங்கறதுக்கு கிடைக்கிற மிச்ச நேரம் 7 மணிநேரம்.

பொண்டாட்டி பிள்ளைகளோட ரெண்டு வார்த்த பேசவோ, கொஞ்ச நேரம் டி.வி பாக்கவோ, பக்கத்து வீட்டு மனுஷங்கள எட்டிப் பாக்கவோ, புத்தகம் வாசிக்கவோ நேரம் ஒதுக்கனும்னா மிச்சம் இருக்கிற அந்த ஏழு மணிநேரத்துலதான் கழிக்கனும்.

இதுல வேலைக்கு போற பெண்கள் நிலைமைய யோசிச்சு பாருங்க. காலைல சமைக்கனும், புள்ளைகளுக்கு ஊட்டனும், ஸ்கூல்க்கு கிளப்பனும், புருஷங்கார புடுங்கிக்கு பணிவிடைகள் செய்யனும். இதெல்லாம் முடிச்சிட்டுதான் வேலைக்கு கிளம்பனும்.

அப்படினா அவ எத்தன மணிக்கு எந்திரிக்கனும்?

இப்ப சொல்லுங்க. 12 மணிநேர வேலைன்னா வெறும் 12 மணிநேரம் மட்டும்தானா?

மனுஷங்கள உணர்வுகளற்ற மெசின்களா மாத்தப்போகுற இந்த இரக்கமில்லாத சட்டத்த உசுரக்குடுத்தாவது முறியடிக்க வேண்டாமா?

# மொழிக்கு பெரும்பங்களித்த எழுத்தாளர்களை நாம் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும் ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி



புதுக்கோட்டை , ஏப்.24-

மொழிக்கு பெரும்பங்களித்த எழுத்தாளர்களை நாம் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஞானாலயா ஆய்வு நூலக நிறுவனர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை, பொதுநூலக இயக்ககம், புதுக்கோட்டை மாவட்ட மைய நூலக வாசகர் வட்டம் சார்பில் உலக புத்தக தின விழா, நேற்று புதுக்கோட்டை மாவட்டமைய நூலகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு வாசகர் வட்ட தலைவர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமை வகித்தார். மாவட்டமைய நூலக முதல் நிலை நூலகர் கி.சசிகலா முன்னிலை வகித்தார்.

விழாவில் ஞானாலயா பா.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில்;-

"புதுக்கோட்டை பல்வேறு சிறப்புகளைப் பெற்றது. பல எழுத்தாளர்களையும். கவிஞர்களையும் உருவாக்கிய பெருமை புதுக்கோட்டைக்கு உண்டு. கவிஞர் கண்ணதாசன் முக்கியமானவர். அதேபோல தமிழகத்தின் முன்னனி பதிப்பகங்களைநடத்தியவர்கள் புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள். புதுக்கோட்டையிலேயே 10க்கு மேற்பட்ட பதிப்பகங்கள் இருந்திக்கிறது வெ.சாமிநாத சர்மாவின் புத்தகங்களை மட்டும் பிரசுரிக்கவே பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம் தொடங்கப்பட்டது. அதைத் தொடங்கி நடத்திய முறையூர் சொக்கலிங்கம் பெருமளவில் பாரட்டப்படவில்லை. அதே போல வருத்தமானது என்னவென்றால்....37 நாடகங்களை எழுதிய சேக்ஸ்பியரின் நினைவு நாளைத்தான் நாம் உலக புத்தக தினமாகக் கொண்டாடுகிறோம். அவரின் நினைவிடத்தை பார்க்க ஆண்டிற்கு 30 லட்சம் பேர் வருகிறார்கள். ஆனால் தமிழ் தாத்தா உ.வே.சா.வின் இல்லத்திற்கு எவ்வளவு பேர் போகிறார்கள். சமீபத்தில் மறைந்த ஜெயகாந்தனைக்கூட அவ்வளவாக நாம் கண்டுகொள்ளவில்லை.

ஆங்கிலேயரின் மொழிப்பற்றும், நாட்டுப்பற்றுமே இங்கிலாந்து உலகமெலாம் ஆளக் காரணம். முதலில் மொழிக்கு பெரும்பங்களித்த எழுத்தாளர்களை நாம் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்க புரட்சி, பிரெஞ்சுப்புரட்சிக்கு முக்கிய தூண்டுகோளே ரூஸோவின் "சமுதாய ஒப்பந்தம் " நூல்தான். அமெரிக்காவில் அடிமை முறை நீங்கக்காரணமே" "அங்கிள் டாம்ஸ் கேபின்" என்ற நூல்தான். நூல்கள் என்ன செய்யும் என்று கேட்க வேண்டாம். புத்தகம் அனைவரையும் மாற்றும் ஆற்றல் வாய்ந்தது. அம்பேத்காரைப் பற்றிப் பேசுவதைவிட அவரின் வாசிக்கும் பழக்கத்தை இளையோரிடம் கொண்டு சேர்ப்பது நல்லது. புத்தகம் படிக்கும் பழக்கம் எல்லோருக்கும் வேண்டும்" என்றார். டாக்டர் ஜெயராமனும் உரையாற்றினார்

இந்நிகழ்வில், தமிழ்ச் செம்மல் விருது பெற்ற வீ. கஸ்தூரிநாதன் குடும்பத்தார், சிறந்தநூலுக்குதமிழகஅரசின் விருது பெற்ற முனைவர் சேதுராமன், பொன்னியின் செல்வன்நூலை வாசித்த லாரா பிரபஞ்சனி, வாசக தம்பதியர் சம்பத்குமார், விஜயலட்சுமி ஆகியோர் பாராட்டு பெற்றனர். முன்னதாக, வாசகர் பேரவைச் செயலர் சா.விஸ்வநாதன் பாராட்டு பெற்றவர்களை அறிமுகப்படுத்தினார். புதுகைப் புதல்வன் வரவேற்புரை ஆற்றினார். நிறைவாக கவிஞர் பீர்முகமது நன்றியுரை யாற்றினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# திருச்சியில் ஓபிஎஸ் நடத்தும் மாநாடு இன்று நடைபெறுகிறது

# இந்தியாவை காப்பாற்ற திமுகவினருக்கு முதல்வர் அழைப்பு





# மன்னிப்பு, நஷ்ட ஈடு பேச்சுக்கே இடமில்லை


| சென்னை / புதுக்கோட்டை | 24.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

24.04.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜி. யு. போப் , தமிழுக்கு சேவை செய்த அமெரிக்கர் (பி.1820) (இ.1908)



விஷ்ணுராம் மேதி , இந்திய அரசியல்வாதி, விடுதலை இயக்க செயற்பாட்டாளர் (பி.1888) (இ.1981)



சச்சின் டெண்டுல்கர் , இந்தியத் துடுப்பாளர் (பி.1973)



## இன்றைய நினைவு நாள்

விளாடிமிர் கொமரோவ் , உருசிய விண்வெளி வீரர் (பி.1923) (இ.2002)



சத்திய சாயி பாபா , இந்திய குரு (பி.1926) (இ.2011)



## ஆர்மீனிய இனப்படுகொலை நினைவு நாள்

## உலக ஆய்வக விலங்குகள் தினம்

## தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் (இந்தியா)